# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, முஸ்லிம் பள்ளிவாசல்கள், தரும நம்பிக்கைப் பொறுப்புகள் அல்லது வக்புகள் (திருத்தச்) சட்டம்

---

*[1982, செத்தெம்பர் மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---


1982, செத்தெம்பர் மாதம் 24 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1·10 தபாற் செலவு : சதம் 75

# 1982 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, முஸ்லிம் பள்ளிவாசல்கள், தரும நம்பிக்கைப்பொறுப்புகள் அல்லது வக்புகள் (திருத்தச்) சட்டம்

[1982, செத்தெம்பர் மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 6/81
1438

**1956 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, முஸ்லிம் பள்ளிவாசல்கள், தரும நம்பிக்கைப்பொறுப்புகள் அல்லது வக்புகள் சட்டத்தைத் திருத்துவதற் கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின் வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டமானது, 1982 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, முஸ்லிம் பள்ளிவாசல்கள், தரும நம்பிக்கைப்பொறுப்புகள் அல்லது வக்புகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1956 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, முஸ்லிம் பள்ளிவாசல் கள், தரும நம்பிக்கைப்பொறுப்புகள் அல்லது வக்புகள் சட்டத்தின் விரி வுப் பெயர் இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டுப் பின்வரும் விரிவுப் பெயர் அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :— 1956 ஆம் ஆண் டின் 51 ஆம் இலக்கச் சட் டத்தின் விரி வுப் பெயரை மாற்றீடு செய்தல்.

"கூட்டிணைக்கப்பட்டனவாயினுஞ்சரி, அல்லாதனவாயினுஞ்சரி, எல் லாப் பள்ளிவாசல்களையும் முஸ்லிம் புண்ணியத்தலங்களையும் மார்க்க வழிபாட்டுக்குரிய இடங்களையும் பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய் வதற்கும், பதிவுசெய்யப்பட்ட பள்ளிவாசல்களினதும் முஸ்லிம் புண் ணியத் தலங்களினதும் மார்க்க வழிபாட்டிடங்களினதும் முஸ்லிம் தரும நம்பிக்கைப்பொறுப்புகளினதும் அல்லது வக்புகளினதும் நம் பிக்கைப்பொறுப்பாளர்களின் தத்துவங்களையும், கடமைகளையும், பணி களையும் விதித்துரைப்பதற்கும், முஸ்லிம் தரும நிதியமொன்றைத் தாபிப்பதற்கும் முஸ்லிம் மரணசாதனமிலா வழியுரிமை மற்றும் வக்பு கள் கட்டளைச்சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தை நீக்கஞ்செய் வதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்".

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவுக்கு நேர்முன்னர் காணப்படும் தலைப்புக்குப் பதிலாகப் பின்வரும் தலைப்பு இத்தால் இடப் படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத் தின் 2 ஆம் பிரி வுக்கு நேர் முன்னுள்ள தலைப்பை மாற்றீடு செய்தல்.

"பாகம் I
பணியாட்டொகுதியும் சபையும் நியாயசபையும்".

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தில் "ஆணையாளர்", "பிரதி ஆணையா ளர்", "பிரதி ஆணையாளர்கள்", "ஆணையாளரின்" என்ற சொற்கள் தோன்றுமிடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக முறையே "பணிப்பாளர்", "பிரதிப் பணிப்பாளர்", "பிரதிப் பணிப்பாளர்கள்", "பணிப்பாளரின்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது. ஆணையாளர், பிரதி ஆணை யாளர்கள் முதலியோர் பணிப்பாளர், பிரதிப் பணிப் பாளர்கள் முதலியோராக இருத்தல்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை நீக்கஞ் செய்தல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

"பிரதிப் பணிப்பாளர்கள், பணிப்பாளரின் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிக்கலாம், அத்துடன் புரியலாம்.

4. பிரதிப் பணிப்பாளர் ஒருவர், பணிப்பாளரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைவாக, பணிப்பாளரின் தத்துவங்களில் எதையேனும் பிரயோகிக்கலாம் அத்துடன், பணிப்பாளரின் கடமைகளில் எதனையேனும் புரியலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு அப்பிரிவின் இறுதியில், பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(3) அமைச்சர், பணிப்பாளர் தவிர்ந்த உறுப்பினர்களுள் ஒருவரை சபையின் தவிசாளராக இருப்பதற்கென நியமிக்கலாம்.

(4) அமைச்சர், சபையின் எவரேனும் உறுப்பினரை, அவ்வுறுப்பினர் தமது கடமைகளைத் தகுதிவாய்ந்த முறையில் நிறைவேற்றவில்லையெனத் திருப்தியடைந்தால், பதவியிலிருந்து அகற்றலாம். பதவியிலிருந்து எவரேனும் உறுப்பினரை அமைச்சர் விலக்கியமைபற்றி எந்நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (உ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

"(உ) பிரிவு 5(4) என்பதன்கீழ் அமைச்சரால் பதவியிலிருந்து அவர் அகற்றப்பட்டால் ; அல்லது"; அத்துடன்

(ஆ) பந்தி (உ) என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலமும் :—

"(ஊ) அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட, தமது கைப்பட்ட எழுத்துமூலம் அவர் பதவியைத் துறந்தால் ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலமும் :—

"(1) தவிசாளர், தாம் சமுகமாக இருக்கும் சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும் தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் எக்கூட்டத்துக்கும் தவிசாளர் வருகைதராதுவிட்டால், அக்கூட்

டத்திற் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் தம்முள் ஒருவரை அக்கூட்டத்திற் தலைமைதாங்கவெனத் தெரிவு செய்தல் வேண்டும்.";

(ஆ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலமும் :—

"(3) சபையின் எக்கூட்டத்திலேனும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் வாக்குகள் ஏதேனும் பிரச்சினை தொடர்பில் சமமாகப் பிரிந்திருக்கின்றவிடத்து, அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்கும் தவிசாளர் அல்லது வேறு உறுப்பினர், உறுப்பினர் என்ற தன்மையில் அவருக்குள்ள வாக்குடன், அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராக இருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 9ஆ, 9இ, 9ஈ, 9உ, 9ஊ, 9எ, 9ஏ, 9ஒ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

10. ஒன்பது அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன ; அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆ, 9இ, 9ஈ, 9உ, 9ஊ, 9எ, 9ஏ, 9ஒ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதல் வேண்டும் :—

"சாட்சிகளை அழைத்தல் முதலியவற்றுக்குச் சபைக்குள்ள தத்துவம்.

9ஆ. சபையின் தவிசாளர் அத்துடன் சபையின் எக்கூட்டத்திற்கும் தவிசாளர் தலைமைதாங்கவில்லையாயின் அக்கூட்டத்தின் தவிசாளர் ஏதேனும் கருமத்தைப் பரிசீலனைக்கெடுத்துத் தீர்மானிக்கும் நோக்கங்களுக்காக—

(அ) சாட்சிகளைக் கட்டளைவிட்டழைப்பதற்கும் அவர்களின் வருகையைக் கட்டாயப்படுத்துவதற்கும் ;

(ஆ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கட்டாயப் படுத்துவதற்கும் ; அத்துடன்

(இ) சாட்சிகளுக்கு ஏதேனும் சத்தியத்தை அல்லது உறுதிமொழியை எடுத்தோதுவிப்பதற்கும்,

தத்துவமுடையவராதல் வேண்டும்.

சபைக்கு விண்ணப்பித்தல்.

9இ. இச்சட்டத்தின்கீழ் சபைக்குச் செய்யப்படும் ஒரு விண்ணப்பம் விதித்துரைக்கப்பட்ட முறையில் இருத்தல் வேண்டும்.

வக்பு நியாயசபை.

9ஈ. (1) மூன்று முஸ்லிம்களைக் கொண்டிருக்கும் வக்பு நியாயசபையொன்று அல்லது காலத்துக்குக் காலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையான வக்பு நியாயசபைகள் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நீதிச்சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) உறுப்பினர்களில் ஒருவரை நியாயசபையின் தவிசாளராக ஆணைக்குழு நியமித்தல் வேண்டும்.

(3) நியாயசபையின் இரண்டு உறுப்பினர்கள் அதன் கூட்ட நடப்பெண்ணாதல் வேண்டும். கூட்ட நடப்பெண் இருந்தாலன்றி, நியாயசபையினால் எந்தக் கருமமும் விசாரணை செய்யப்படுதலாகாது.

(4) ஏதேனும் கருமத்தை விசாரிப்பதற்குப் பிரசன்னமாயிருந்த நியாயசபை உறுப்பினர்களில் பெரும்பான்மையினரின் முடிவு, எல்லா நோக்கங்களுக்காகவும், நியாயசபையின் முடிவாகக் கருதப்படுதல் வேண்டும்.

நியாயசபையின் பொதுத் தத்துவங்கள்.

9உ. (1) இச்சட்டத்தின்கீழ் நியாயசபைக்குள்ள தத்துவங்கள், பின்வரும் நோக்கங்கள் எல்லாவற்றிற்கும் அல்லது அவற்றுள் எதற்கேனும் ஏற்பாடுசெய்கின்ற கட்டளை ஒன்றுக்காக முஸ்லிம் தரும நம்பிக்கைப்பொறுப்பு அல்லது வக்பு தொடர்பாகச் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தை விசாரித்துத் தீர்மானிப்பதற்குள்ள தத்துவத்தையும் உள்ளடக்குதல் வேண்டும் :—

(அ) நம்பிக்கைப்பொறுப்பின் அல்லது வக்பின் எவரேனும் நம்பிக்கைப் பொறுப்பாளரைப் பதவியிலிருந்து அகற்றுதல் ;

(ஆ) அவசியமானவிடத்து, நம்பிக்கைப் பொறுப்புக்கு அல்லது வக்புக்கு நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவரை அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர்களை நியமித்தல் ;

(இ) நியாயசபைக்கு அல்லது சபைக்கு கணக்குக் கூற்றுக்கள் சமர்பிக்குமாறு பணித்தல் ;

(ஈ) நம்பிக்கைப்பொறுப்பின் அல்லது வக்பின் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோளுக்கு நம்பிக்கைப்பொறுப்பின் அல்லது வக்பின் ஆதனத்தின் என்ன விகிதாசாரம் அல்லது அதன் கண்ணுள்ள அக்கறையின் என்ன விகிதாசாரம் குறித்தொதுக்கப்பட வேண்டுமென வெளிப்படுத்துதல் ;

(உ) நம்பிக்கைப்பொறுப்பை அல்லது வக்பை முகாமைசெய்வதற்கான திட்டமொன்றை நிர்ணயித்தல் ;

(ஊ) நம்பிக்கைப்பொறுப்பின் அல்லது வக்பின் நம்பிக்கைப்பொறுப்பாளர் அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளர்களால் ஏதேனும் செயல் குறிப்பாகப் புரியப்படவேண்டுமெனப் பணித்தல் ;

(எ) நம்பிக்கைப்பொறுப்பின் அல்லது வக்பின் எவரேனும் நம்பிக்கைப்பொறுப்பாளரை பிறழ் நடத்தைக்காக, நம்பிக்கைமோசடிக்காக அல்லது கடமை உதாசீனத்துக்காக, குற்றவாளி என வெளிப்படுத்துதல் ;

(எ) ஏதேனும் பிறழ்நடத்தை, நம்பிக்கைமோசடி, அல்லது கடமை உதாசீனம் காரணமாக சேத ஈடுகள் என்ற வகையில் நம்பிக்கைப் பொறுப்பின் அல்லது வக்பின் நிதியங்களுக்கு ஏதேனும் பணத்தொகையைச் செலுத்துமாறு நம்பிக்கைப்பொறுப்பின் அல்லது வக்பின் எவரேனும் நம்பிக்கைப் பொறுப்பாளருக்குக் கட்டளையிடுதல்; அத்துடன்

(ஐ) பந்திகள் (அ) முதல் (எ) வரையில் குறித்துரைக்கப்பட்ட கருமங்களிலிருந்து எழும் அத்தகைய மேலதிக அல்லது வேறு நிவாரணத்தை வழங்குதல்.

(2) மூன்றும் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக முஸ்லிம் தரும நம்பிக்கைப்பொறுப்பு அல்லது வக்பு ஒன்று தொடர்பிலான விண்ணப்பம் ஒவ்வொன்றும் அதன் சார்பில் சபையினால் அல்லது அந்நம்பிக்கைப் பொறுப்பில் அல்லது வக்பில் அக்கறையுடைய எவரேனும் ஐந்து ஆட்களினால் அல்லது அதற்கு மேற்பட்டோரால் கொடுக்கப்பட்ட பணிப்பொன்றன்மீது பணிப்பாளரினால் செய்யப்படுதல் வேண்டும்.

(3) பணிப்பாளரினால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றுதவிர்ந்த, விண்ணப்பம் எதுவும், அவ்விண்ணப்பம் சபையினால் அங்கிகரிக்கப்பட்டுள்ளதென்ற பணிப்பாளரின் கைப்பட்ட சான்றிதழொன்றுடன் சேர்த்தனுப்பப்பட்டிருந்தாலொழிய, இப்பிரிவின்கீழ் நியாய சபையினால் கவனத்துக்கெடுத்துக்கொள்ளப்படுதல் ஆகாது.

(4) முஸ்லிம் தரும நம்பிக்கைப்பொறுப்பு அல்லது வக்பு ஒன்றில் அக்கறையுள்ள ஐந்து ஆட்கள் அல்லது அதற்கு மேற்பட்டோர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்றைச் செய்துள்ளவிடத்து, அவர்களுள் ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்டோர் பின்வாங்குதல், அவ்விண்ணப்பத்தைச் செய்தவர்களுள் ஆகக் குறைந்தது ஒருவராவது அவ்விண்ணப்பத்துக்குத் திறத்தவராக இருக்கும்வரைக்கும், அவ்விண்ணப்பத்தை நியாயசபை விசாரித்து தீர்மானிப்பதிலிருந்து அதனை தடைசெய்வதாகாது.

**சாட்சிகளைக் கட்டளையிட்டழைத்தல் முதலியவற்றுக்கு நியாய சபைக்குள்ள தத்துவம்.**

9ஊ. நியாயசபையைத் தவிசாளரும், தவிசாளர் நியாய சபையின் ஏதேனும் கூட்டத்தில் தலைமைதாங்காவிட்டால் அக்கூட்டத்தின் தவிசாளரும், ஏதேனும் கருமத்தைச் சீர்தூக்கிப்பார்த்து தீர்மானிக்கும் நோக்கங்களுக்காக—

(அ) சாட்சிகளைக் கட்டளையிட்டழைத்து அவர்களின் வருகையைக் கட்டாயப்படுத்துவதற்கும்;

(ஆ) ஆவணங்களைக் காண்பிப்பதனைக் கட்டாயப்படுத்துவதற்கும்; அத்துடன்

(இ) சாட்சிகளுக்கு ஏதேனும் சத்தியப் பிரமாணத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதுவிப்பதற்கும்,

மாவட்ட நீதிமன்றமொன்றிற்குள்ள தத்துவங்கள் எல்லாவற்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**நியாயசபை முன்னரான வழக்கு நடவடிக்கைகள்.**

9எ. இச்சட்டத்தின்கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் நியாயசபையானது மாவட்ட நீதிமன்றமொன்றின் நடைமுறையைப் பின்பற்றுதல் வேண்டும்; அத்துடன் அதன் கட்டளைகளையும் தீர்ப்புக்களையும் நிறைவேற்றுகையில் மாவட்ட நீதிமன்றத்துக்குள்ள எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் மாவட்ட நீதிமன்றமொன்றின் நிறைவேற்றுகை நடைமுறைகளும் தத்துவங்களும் தொடர்பிலான குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகள், நியாயசபையின் நிறைவேற்றத் தத்துவங்களுக்கும் நடைமுறைகளுக்கும், அவை தொடர்பிலும், ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**சபையின் கட்டளைகள் முதலியவற்றிலிருந்து நியாய சபைக்குச் செய்யப்படும் மேன்முறையீடுகள்.**

9ஏ. (1) சபையினால் செய்யப்பட்ட ஏதேனும் கட்டளையினால் அல்லது முடிவினால் இடருற்ற எவரேனும் ஆள், அத்தகைய கட்டளை அல்லது முடிவுத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக, அத்தகைய கட்டளைக்கு அல்லது முடிவுக்கு எதிராக, நியாயசபைக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம்.

(2) ஓராமுட்பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டை விசாரித்துத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, நியாயசபை பின்வரும் தத்துவங்களை உடையதாக இருத்தல் வேண்டும்:—

(அ) சபை முன்னரான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளின் பதிவேட்டையும் சபையின் உடைமையில் உள்ள எவையேனும் ஆவணங்களையும் கோரிப் பெறுதல்; அத்துடன்

(ஆ) மேன்முறையீட்டு நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய விசாரணைகளைச் செய்தல்; அத்துடன் பொருத்தமானதென அது நினைத்தால் வாய்மொழிமூல அல்லது ஆவணச்சான்று எதனையும் ஏற்றுக்கொள்ளல் அல்லது கோரிப்பெறுதல்.

(3) மேன்முறையீடொன்றை விசாரித்ததன்மேல், நியாயசபை சபையின் கட்டளையை அல்லது முடிவை உறுதிப்படுத்தி, தள்ளிவைத்து அல்லது வேறுபடுத்திக் கட்டளை ஆக்குதல் வேண்டும் அல்லது அதுபற்றி அது பொருத்தமானதென எண்ணும் அத்தகைய வேறு கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

முஸ்லிம் தரும நம்பிக்கைப் பொறுப்புகள் அல்லது வக்புகள் தொடர்பிலான கருமங்கள்பற்றி விசாரிப்பதற்கு நியாயசபை புறநீங்கலாக நியாயாதிக்கம் கொண்டதாக இருத்தல்.

9ஔ. முஸ்லிம் தரும நம்பிக்கைப்பொறுப்புகள் அல்லது வக்புகள் தொடர்பான கருமங்கள் தொடர்பில் நியாயசபையினால் பிரயோகிக்கப்படற்பாலதான நியாயாதிக்கம் புறநீங்கலானதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அந்நியாயாதிக்கத்தினுள் வரும் ஏதேனும் கருமம் ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தினால் அல்லது நியாய சபையினால் விளங்கப்படுதல் அல்லது விசாரணை செய்யப்படுதல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும், அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(1) பதின்மூன்றும் பிரிவின்கீழ் பள்ளிவாசலொன்று பதியப்பட்டதன்பின்னர் இயலக்கூடியளவு விரைவாக, சபையானது—

(அ) பள்ளிவாசலின் நிருவாகம் தொடர்பில், நடைமுறையில் இருக்கும் நடைமுறைகள், விதிகள், ஒழுங்குவிதிகள் அல்லது வேறு ஒழுங்குகள் போன்றவைகளுக்கு இணங்க நம்பிக்கைப்பொறுப்பாளராக அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளை அல்லது ஆட்களை உறுதிப்படுத்தி நியமித்தல் வேண்டும்;

(ஆ) பந்தி (அ) என்பதன்கீழ் எந்த நம்பிக்கைப்பொறுப்பாளராவது அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளர்களாவது நியமிக்கப்படாவிட்டால், சபை, பள்ளிவாசல் ஜம்மாத்தின் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களிலிருந்து நம்பிக்கைப் பொறுப்பாளராக அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளர்களாக ஆளொருவரை அல்லது ஆட்களை நியமிக்கலாம்;

(இ) பள்ளிவாசலின் முறையான நிருவாகத்திற்கு அவசியமான தெனச் சபை கருதினால், குறிப்பிட்ட காலப் பகுதியொன் றிற்கு சிறப்பு நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவரை அல் லது நம்பிக்கைப்பொறுப்பாளர்களை நியமிக்கலாம்.";

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(2) சபையினால் நம்பிக்கைப்பொறுப்பாளராக நியமிக்கப் படும் ஒவ்வோர் ஆளும்—

(அ) பள்ளிவாசலின் நிருவாகம் தொடர்பில் நடைமுறையில் இருக்கும் நடைமுறைகள், விதிகள், ஒழுங்குவிதிகள் அல் லது வேறு ஒழுங்குகள் போன்றவைகளினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அத்தகைய காலப்பகுதிக்கு நம்பிக் கைப்பொறுப்பாளராகக் கடமை புரிதல் வேண்டும்; அல் லது

(ஆ) அவர் 15 ஆம் பிரிவின்கீழ் தமது பதவியை வறிதாக்கினா லன்றி அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளரென்ற அவரு டைய நியமனம், சபையினால் அல்லது நியாய சபையினால் நீக்கப்பட்டாலன்றி, நியமனச் சாதனத்தில் குறித்துரைக் கப்படக்கூடிய அத்தகைய காலப்பகுதிக்கு அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பாளராகப் பதவி வகித்தல் வேண் டும்;";

(இ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினை இடுவதன்மூலமும் :—

"(3அ) (அ) பள்ளிவாசல் நிருவாகம் தொடர்பில் அப் போதைக்கு வலுவிலுள்ள நடைமுறைகள், விதிகள், ஒழுங்குவிதிகள் அல்லது வேறு ஒழுங்குகள் என்பனவற்றின் முறையாக அத் தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியையும்; அத் துடன்

(ஆ) பள்ளிவாசலின் அப்போதைக்கான ஜும்மாத் தின் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் நிரலினது பிரதியொன்றையும்,

பணிப்பாளரிடம் சமர்ப்பிப்பது பள்ளிவாசலின் நம்பிக்கைப் பொறுப்பாளரது அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளர்களது கடமையாதல் வேண்டும்."; அத்துடன்

(ஈ) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது :—

அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அந்த உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை, அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியாக மீள எழுத்திடுவதன்மூலமும்;

(ஆ) அந்த உட்பிரிவின் மீள எழுத்திடப்பட்ட (எ) என்னும் பந்திக்கு நேரமுன்னர் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலமும் :—

" (ஊ) ஜும்மாப் பள்ளிவாசலொன்றின் நம்பிக்கைப்பொறுப் பாளராக அவர் இருக்கும்வேளையில், இன்னொரு ஜும்மாப் பள்ளிவாசலின் நம்பிக்கைப்பொறுப்பாளராகப் பதவிவகித்தால்:

ஆயின், எவ்வாறாயினும் குறிப்பிட்ட இடப்பரப்பொன்றில் நெடுங்கால நடைமுறைக்கு அல்லது வழக்கத்திற்கிணங்க ஒன் றிற்கு மேற்பட்ட ஜும்மாப் பள்ளிவாசல்கள் நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் பொதுச் சபையொன்றினால் நிருவகிக்கப் படுமிடத்து, ஜும்மாப் பள்ளிவாசலொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளரொருவர் இன்னொரு ஜும்மாவில் நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவியை வகிக்கலாம் ; அல்லது ".

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15அ என்னும் பிரிவானது, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 15அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

" (இ) வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், (3) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிவான் நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றை நிறைவேற்றுதல் அத்தகைய கட்டளையை வேறுபடுத்தும் அல்லது தள்ளிவைக்கும் கருத்துடன் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட உத்தேசிக்கப்பட்ட ஏதேனும் மேன்முறையீடுமூலம் அல்லது வேறு வழிவகைமூலம் எவ்வகையிலேனும் நிறுத்திவைக்கப்படுதல் ஆகாது. ".

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு, " சபையின் அனுமதி " என்ற சொற்களுக்குப் பதிலாக, " பணிப்பாளரின் அல்லது பிரதிப் பணிப்பாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் அனுமதி " என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

15. பின்வரும் பிரிவு, 20 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத் தப்படுகின்றதென்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 20அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :—

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 20அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

*" அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களும் அவர்களுடைய பணிகளும்.*

20அ. (1) பணிப்பாளர், இச்சட்டத்தின் நோக்கங் களுக்காக, அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான அலுவலர்களை அதிகாரமளிக் கப்பட்ட அலுவலர்களாக இருக்கவென எழுத்தில் அதி காரமளிக்கலாம்.

(2) அதன்சார்பில் பணிப்பாளரினால் அறிவுறுத்தப் பட்டதன்மேல், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொரு வர்—

(அ) எவரேனுமாள் இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறியுள்ளாரா வெனக் கண்டறிதல் வேண்டும் ;

(ஆ) 21 ஆம், 22 ஆம், 25 ஆம், 29 ஆம் பிரிவுகளின் கீழ் சபைக்கு விண்ணப்பம் செய்தல் வேண்டும்;

(இ) சபையில், நியாயசபையில் அல்லது நீதிமன்றமொன்றில் அவசியமாகக்கூடியவாறான ஏதேனும் வழக்கை அல்லது வழக்கு நடவடிக்கையைத் தொடருதல் வேண்டுமென்பதோடு, எதிர்வாதிடலும் வேண்டும்;

(ஈ) பதிவுசெய்யப்பட்ட பள்ளிவாசலொன்றின் எவரேனும் நம்பிக்கைப்பொறுப்பாளரினால் அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளர்களினால் ஆதனத்தை மோசடிசெய்தமை அல்லது தவறாகப் பயன்படுத்தியமை பற்றிய ஏதேனும் சார்த்துரையை விசாரணைசெய்தல் வேண்டுமென்பதோடு அதுபற்றி அறிக்கையிடுதலும் வேண்டும் அல்லது சபையின் பணிப்பாளரின் அல்லது எவரேனும் பிரதிப் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவருதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை நீக்கஞ்செய்வதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை 21 ஆம் பிரிவென மீள இலக்கமிடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவிலுள்ள "அப்பள்ளிவாசலின் நம்பிக்கைப்பொறுப்பாளரை அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளர்களைப் பணிப்பதற்கு" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரைப் பணிப்பதற்கு" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "அப்பள்ளிவாசலின் நம்பிக்கைப்பொறுப்பாளரை அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளர்களைப் பணிப்பதற்கு" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரைப் பணிப்பதற்கு" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவினை நீக்கஞ்செய்வதன்மூலமும்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "பதிவுசெய்யப்பட்ட பள்ளிவாசலொன்றின் நம்பிக்கைப்பொறுப்பாளர் அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளர்கள்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது பதிவுசெய்யப்பட்ட பள்ளிவாசலொன்றின் நம்பிக்கைப்பொறுப்பாளர் அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளர்கள்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பிரிவின், (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(2) பதிவுசெய்யப்பட்ட பள்ளிவாசல் ஒன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர், வழக்கொன்றில் அவர் வழக்காளியாக இருந்தாலும்சரி எதிராளியாகவிருந்தாலும் சரி, அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அல்லது கடமைகளை நிறைவேற்றுகையில் அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்கெனத் தனிப்பட்ட முறையில் பொறுப்புள்ளவராதல் ஆகாது."; அத்துடன்

(இ) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்புக்குப் பதிலாகப் பின்வரும் ஓரக் குறிப்பை இடுவதன்மூலமும் :—

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்
அல்லது பதிவுசெய்யப்பட்ட
பள்ளிவாசலொன்றின் நம்பிக்கைப்
பொறுப்பாளர் அல்லது
நம்பிக்கைப்பொறுப்பாளர்கள்
வழக்குத் தொடரலாம்.".

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "சபையினால்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "சபையினால் அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில், "அவ்வாறு அக்கறையுள்ள வேறு ஆள் எவரையும் வழக்காளியாகச் சேர்க்காமல், தீர்வையொன்றைப் பெறுவதற்காக, அப்பள்ளிவாசல் அமைந்துள்ள இடத்தில் நியாயாதிக்கந் கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் அப்பள்ளிவாசலின் நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவருக்கெதிராக வழக்கொன்றைத் தொடரலாம்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவருக்கெதிராக் கட்டளையொன்றைப் பெறுவதற்காக நியாயசபைக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலமும் :—

"(7) பணிப்பாளரினால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று தவிர்ந்த விண்ணப்பம் எதுவும், அவ்விண்ணப்பம் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென்ற, பணிப்பாளரின் கைப்பட்ட சான்றிதழொன்றுடன் சேர்த்தனுப்பப்பட்டிருந்தாலொழிய, இப்பிரிவின்கீழ் நியாயசபையினால் ஏற்றுக்கவனிக்கப்படுதலாகாது."; அத்துடன்

(3) அப்பிரிவின் (9) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலமும் :—

"(9) பள்ளிவாசலொன்றில் அக்கறையுள்ள ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் (6) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்றைச் செய்துள்ளவிடத்து, அவ்விண்ணப்பத்திலிருந்து ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்டோர் பின்வாங்குதல், அவ்விண்ணப்பத்தைச் செய்தவருள் ஆகக்குறைந்தது ஒருவராவது தொடர்ந்து அதற்குத் திறத்தவராக இருக்கும்வரை, நியாயசபை அவ்விண்ணப்பத்தை விசாரித்துத் தீர்மானிப்பதனைத் தடை செய்யமாட்டாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவானது, "சபையினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சபையினால் அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவைத் திருத்துதல்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "பின்வரும் எல்லா நோக்கங்களுக்காகவும் அல்லது அவற்றுள் எதற்காகவேனும்" என்பது தொடங்கி அவ்வுட்பிரிவு முடியவுள்ள எல்லாவற்றிக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :—

"பின்வரும் இரு நோக்கங்களுக்காக அல்லது இரண்டிலொரு நோக்கத்துக்காக :—

(அ) நம்பிக்கைப்பொறுப்பில் அல்லது வக்பில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆதனங்களைக் கணக்கிடுதல் ; அத்துடன்

(ஆ) விடயத்தின் சூழ்நிலைகள் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய மேலதிக அல்லது வேறு நிவாரணம் வழங்குதல்." ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவினை நீக்குவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துதல்.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) "நீதிமன்றம்" என்ற சொல் அப்பிரிவில் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அதற்குப் பதிலாக "நியாயசபை" என்ற சொல்லை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில், " நீதிமன்றத்தின் தத்துவம்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, " நியாயசபையின் தத்துவம்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவானது, " நீதிமன்றம்" என்ற சொல்லுக்குப் பதிலாக " நியாயசபை " என்ற சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துதல்.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) " இருபத்தொன்பதாம் பிரிவின்கீழ்" என்பது தொடங்கி " அதன் தீர்வையில் ஏற்பாடு செய்யலாம் :—" என்பது வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

" இருபத்தொன்பதாம் பிரிவின்கீழ் ஏதேனும் விண்ணப்பம் நியாயசபைக்குச் செய்யப்பட்டுள்ளவிடத்து, 29 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய கட்டளையில் ஏற்பாடு செய்யப்படக்கூடிய கருமங்களோடு மேலதிகமாக, பின்வரும் எல்லா நோக்கங்களுக்காகவும் அல்லது அவற்றுள் எதற்காகவும், அதன் கட்டளையில் நியாய சபை ஏற்பாடுசெய்யலாம் :—" ; அத்துடன்

(ஆ) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்புக்குப் பதிலாகப் பின்வரும் ஓரக் குறிப்பினை இடுவதன்மூலமும் :—

" 29 ஆம் பிரிவின்கீழான
விண்ணப்பம் தொடர்பில்
நியாய சபைக்குள்ள
மேலதிகத் தத்துவங்கள்.".

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவும், 49 ஆம் பிரிவும் இத்தால் நீக்கப்படுகின்றன. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவையும் 49 ஆம் பிரிவையும் நீக்கஞ்செய்தல்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவை நீக்கஞ் செய்தல்.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன்மூலம், அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் :—

" (3) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாகும் ஒவ்வோர் ஆளும், நீதிவானொருவர் முன்பாக சுருக்க விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இரண்டாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.".

முதனமைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவைத் திருத்துதல்.

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "அல்லது பள்ளிவாசலொன்றின் நம்பிக்கைப்பொறுப்பாளர்களின்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "அல்லது நியாயசபையின் அல்லது பள்ளிவாசலொன்றின் நம்பிக்கைப்பொறுப்பாளர்களின்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளை நீக்கி, அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலமும் :—

" (3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்பட்டதன்பின்னர் வசதியாகக் கூடியளவு விரைவாக அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்பட்டதும் இச்சட்டத்தின் ஏற்பாடொன்றைப் போன்ற அதே வலுவும், பயனும் உடையதாதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமில்லாமல், அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்." ; அத்துடன்

(இ) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

" (5) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி நீக்கப்பட்டதாகக் கருதப்படவேண்டிய தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 55 அ, 55 ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

30. பின்வரும் புதிய பிரிவுகள், 55 ஆம் பிரிவை உடனடுத்து, இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 55அ, 55ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுடைத்தாதலும் வேண்டும் :—

"மேன்முறையீடுகள்.

55 அ. நியாயசபையினால் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும் மாவட்ட நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், மாவட்ட நீதிமன்றமொன்றன் கட்டளை

களுக்கெதிராகவும் தீர்ப்புகளுக்கெதிராகவும் செய்யப்படும் மேன்முறையீடுகளை ஆளும் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகள் நியாயசபையின் கட்டளைக்கெதிராகச் செய்யப்படும் மேன்முறையீடுகளுக்கும் அவை தொடர்பிலும், ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

**அவமதிப்பு நடவடிக்கைகள்.**

55 ஆ. நியாயசபையின் அதிகாரத்துக்கெதிரான அவமதிப்புத் தவறுகைகளைக் கையாளும் நோக்கங்களுக்காக, நியாயசபை மாவட்ட நீதிமன்றமொன்றுக்குள்ள தத்துவங்களைக் கொண்டிருக்கும்; அத்துடன், அதற்கிணங்க, 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 55 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், மாவட்ட நீதிமன்றமொன்று பற்றி அதன்கணுள்ள குறிப்பீடுகள், நியாயசபை பற்றிய குறிப்பீடுகள் என்றாற்போன்று, ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 57ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.**

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் 57ஆ என்னும் பிரிவானது, "எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் எது எப்படியிருப்பினும், சமயச்சார்பான இடம்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் பள்ளிவாசலின், முஸ்லிம் புண்ணியத்தலத்தின் அல்லது சமயச்சார்பான இடத்தின் நிருவாகம் தொடர்பாக எழுத்திலான ஏதேனும் சட்டத்தில் அல்லது நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையில் உள்ளது எது எவ்வாறிருப்பினும், கூட்டிணைக்கப்பட்டாலுஞ்சரி, அல்லது இல்லாவிட்டாலுஞ்சரி சமயச்சார்பான இடம்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தில் 57 இ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.**

32. பின்வரும் புதிய பிரிவு, 57ஆ என்னும் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 இ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :—

**"தண்டங்களையும் குற்றப்பணங்களையும் அறவிடுவதற்கான நடைமுறை.**

57 இ. நியாயசபையினால் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் ஏதேனும் குற்றப்பணம் அல்லது தண்டம், தவணை தவறப்படும் விடயத்தில், வேறு ஏதேனும் சட்டத்தினால் விதிக்கப்பட்ட எவையேனும் வரையறைகளைப் பொருட்படுத்தாது, அத்தகைய தண்டத்தை அல்லது குற்றப்பணத்தைச் செலுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள ஆள் அப்போதைக்கு வதியும் இடப்பரப்பில் நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவானுக்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது, அறவிடப்படலாம்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவைத் திருத்தல்.**

33. முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) "சபை" என்பதன் வரைவிலக்கணத்துக்கு நேர்முன்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :—

'"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அத்தகையவராகச் செயலாற்றுவதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் என்று பொருள்படும்;';

(ஆ) "ஜம்மாத்" என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கி, பின்வரும் வரைவிலக்கணத்தை அதற்குப் பதிலாக இடுவதன்மூலமும்:—

'"ஜம்மாத்" என்பது பள்ளிவாசலொன்று தொடர்பாக, பள்ளிவாசலின் சமய அல்லது வழமையான சடங்குகளிலும் கொண்டாட்டங்களிலும் சாதாரணமாக வணங்குபவர்கள் அல்லது பங்குபற்றுபவர்கள் என்பதோடு, அப்போதைக்கு பள்ளிவாசலின் இடாப்பில் அவர்களின் பெயர்கள் காணப்படும் ஆட்கள் எனவும் பொருள்படும்;';

(இ) "உறுப்பினர்" என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:—

'"உறுப்பினர்" என்பது விடயத்துக்கேற்றாற்போல் சபையின் அல்லது நியாயசபையின் உறுப்பினர் ஒருவர் என்று பொருளாகும்;';

(ஈ) "உறுப்பினர்" என்பதன் வரைவிலக்கணத்தை நேரேயுடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:—

'"அமைச்சர்" என்பது முஸ்லிம் அலுவல்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் என்று பொருளாகும்;';

(உ) "பள்ளிவாசல்" என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாக, பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:—

'"பள்ளிவாசல்" என்பது கூட்டிணைக்கப்பட்டதாயினும் சரி அல்லவாயினுஞ் சரி ஏதேனும் குழுவின் அல்லது ஜம்மாத்தின் அல்லது ஏதேனும் குழுவுக்கான அல்லது ஜம்மாத்துக்கான தனிப்பட்ட முஸ்லிம் வணக்கத்திற்குரிய ஏதேனும் இடமென்று பொருள்படுவதோடு, ஏதேனும் பள்ளிவாசலோடு இணைந்திருந்தாலும் அல்லது இணைந்திருக்காவிட்டாலும், ஏதேனும் தாக்கியாவையும் அல்லது ஷாபியாவையும் உள்ளடக்கும்;';

(ஊ) "முஸ்லிம் புண்ணியத்தலங்களும் சமயச்சார்பான இடங்களும்" என்பதன் வரைவிலக்கணத்தை நேரேயுடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:—

'"அவ்வாறு நியமிக்கப்படுவதற்கு நேரே முன்னர் எத்தன்மைத்தான எவ்வகையிலேனும் உடைமையை, கட்டுக்காப்பை அல்லது கட்டுப்பாட்டை உடைய ஆள் அல்லது ஆட்கள்" என்பது ஏதேனும் நம்பிக்கைப்பொறுப்பின், உறுதியின் அல்லது ஆவணத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகை, வேறு ஏதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், எத்தன்மைத்தான எவ்வகையிலேனும், அப்பள்ளிவாசலுக்குச் சொந்தமான அல்லது எவ்வகையிலேனும் சார்ந்த அல்லது அதன் பயன்பாட்டுக்கென ஒதுக்கப்பட்ட அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தை

உடைமையில் வைத்திருக்கின்ற, இருப்பாட்சி செய்கின்ற, பராதீனப்படுத்துகின்ற, கொள்ளுகின்ற அல்லது அதன்மீது ஊடுருவுகின்ற எவரேனும் ஆட்கள் எனப் பொருளாகும்;';

(எ) "குறித்துரைக்கப்பட்ட" என்ற சொல்லின் வரைவிலக்கணத்தில் "ஒழுங்குவிதி என்று பொருளாகும்; அத்துடன்" என்ற சொற்களுக்குப் பதிலாக "ஒழுங்குவிதி என்று பொருளாகும்;" என்ற சொற்களை இடுவதன் மூலம்;

(ஏ) "பதிவுசெய்யப்பட்ட பள்ளிவாசல்" என்ற சொற்றொடரின் வரைவிலக்கணத்தில் "பள்ளிவாசல் என்று பொருளாகும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "பள்ளிவாசல் என்று பொருளாகும்; அத்துடன்" என்ற சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஐ) "பதிவுசெய்யப்பட்ட பள்ளிவாசல்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :—

'"நியாயசபை" என்பது இச்சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட வக்பு நியாயசபை என்று பொருள்படும்.'.

**முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாவது அட்டவணையைத் திருத்துதல்.**

34. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அந்த அட்டவணையின் 1 ஆம் விதியை நீக்கி, அதற்குப் பதிலாகப் பின்வரும் விதியை இடுவதன்மூலமும் :—

"1. பதிவுசெய்யப்பட்ட பள்ளிவாசல் ஒன்று, முஸ்லிம் தரும நம்பிக்கைச் சொத்தொன்று அல்லது வக்பொன்று தொடர்பாக முஸ்லிம் தரும நம்பிக்கைச் சொத்து நிதியத்திற்கான ஏதேனும் ஆண்டுக்காய உதவுதொகை வீதம் அந்த ஆண்டின் தேறிய வருமானத்தில் ஆறு நூற்றுவீதமாக இருத்தல் வேண்டும்."; அத்துடன்

(ஆ) அந்த அட்டவணையின் 2 ஆம் விதியில், "25 நூற்றுவீதம்" என்ற எண்களுக்கும் சொற்களுக்கும் பதிலாக "10 நூற்றுவீதம்" என்ற எண்களையும் சொற்களையும் இடுவதன்மூலம்.

**நிலைபெயர் கால ஏற்பாடு**

35. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று, இச்சட்டத்தின்கீழ் வக்பு நியாயசபையினது புறநீங்கலான நியாயாதிக்கத்திற்குள்ளாகவுள்ள ஏதேனும் விடயம் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அல்லது உயர்நீதிமன்றத்தில் அத்தகைய ஏதேனும் விடயம் தொடர்பில் ஏதேனும் தீர்ப்பிலிருந்து அல்லது கட்டளையிலிருந்து முடிவுறுதுள்ள மேன்முறையீடு தவிரவும் நீங்கலாகவும், ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் முடிவுறுதிருக்கும் எல்லாக் கருமங்களும் அல்லது தொடர்ச்சிகளும், வழக்கு நடவடிக்கைகளும் முதன்மைச் சட்டவாக்கம் இச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து விசாரித்துத் தீர்மானிக்கப்பட அல்லது தொடர்ந்து முடிவாக்கப்பட வக்பு நியாயசபைக்கு மாற்றப்பட்டு இருத்தல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.